**கற்பிட்டி பிரதேச சபை**
**புத்தளம் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 24 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 24 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கற்பிட்டி பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

ரூபா 13,435,961 தொகையான சம்பள மீளளிப்பு ரூபா 13,196,538 ஆக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

11 கணக்கு விடயங்களுக்காக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படுகின்ற மிதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,469,903 இற்குரிய பட்டோலைகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 17,149,410 ஆனமையால் ரூபா 828,429 தொகையான வேறுபாடு வெளிப்படுத்தப்பட்டது.

#### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகள்

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

i. மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 76,900,778 தொகையான பெறவேண்டிய தொகையிலிருந்து ஒரு வருடத்தை விஞ்சி கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 49,866,109 ஆகும். 1989 முதல் 2010 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டுள்ள முற்பணத்தின் கூட்டுமொத்தம் ரூபா 231,087 இனைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. 2015 சனவரி மாதத்தின் போது சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட பதவியணியினரின் சம்பளம் / படிகளிலிருந்து ரூபா 18,718,312 தொகை உள்ளுராட்சித் திணைக்களத்திலிருந்து கிடைக்க வேண்டியிருந்தது.

iii. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய ரூபா 4,449,080 தொகையான ஊழியர் கடன் முற்பணத்திலிருந்து ஓய்வுபெற்றுச் சென்ற, சேவையை கைவிட்டுச் சென்ற மற்றும் மரணித்த 60 ஊழியர்களிடமிருந்து 03 வருடங்களை விஞ்சி அறவிடவேண்டிய தொகை ரூபா 487,546 ஆகும்.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

i. 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 34,172,803 ஆகும்.

ii. முன்னைய ஆண்டுகள் முதல் சபையினால் சேகரிக்கப்பட்ட முத்திரை வரி, பெறுமதி சேர் வரி (வற்) மற்றும் பொருட்கள், சேவைகள் வரிகள் முறையே ரூபா 4,581,926, ரூபா 1,874,996 மற்றும் ரூபா 289,388 தொகை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்குச் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

06 கணக்கு விடயங்களில் ரூபா 199,814,200 கூட்டுத்தொகையான சொத்துக்களையும் பொறுப்புக்களையும் உறுதிப்படுத்துவதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானத்துடன் இணங்காமைகள்

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம் | |
| 129(2)(ஆ) மற்றும் (ஊ) பிரிவுகள் மற்றும் 150(4), 158 ஆம் பிரிவுகள் | (i) பிரதேச சபையின் அறவிடவேண்டிய ஆதனவரி, ஏக்கர் வரி, வாடகை, அனுமதிப்பத்திரக் கட்டணம், நீதிமன்றத் தண்டப்பணம், முத்திரைக் கட்டணம் மற்றும் சம்பள மீளளிப்புக்கள் என்பவற்றை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) அனுமதிப்பத்திரக்கட்டணம், ஆதனவரி மற்றும் ஏக்கர் வரி என்பவற்றை செலுத்தாதோருக்கு சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கும் ஆதனங்களைத் தடை செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(5) | 1989 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை 21 சந்தர்ப்பங்களின் கீழ் வழங்கப்பட்ட ரூபா 251,087 கூட்டுத்தொகையான உபகட்டுநிதி 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. |

(ii) நிதிப்பிரமாணம் 571 — 02 வருடங்களை விஞ்சிய ரூபா 520,366 பெறுமதியான வைப்புக்களை சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,079,818 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 23,005,549 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவில் ரூபா 74,269 தொகையான அதிகரிப்பிற்காக சபையில் உழைக்கப்படாத ஏனைய வருமானம் அதிகரித்தமை பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

### 2.3 வருமான நிர்வாகம்

#### 2.3.1 வருமானம் சேகரித்தலின் செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்காக ரூபா 92 மில்லியன் தொகையாக மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தில் ரூபா 40 மில்லியன் மாத்திரம் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் ரூபா 35,023,043 தொகையான நிலுவை வருமானத்தில் ரூபா 3,210,586 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய வருமானங்களின் ஒட்டுமொத்த நிலுவை ரூபா 42,113,876 ஆகும்.

#### 2.3.2 ஆதன வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ரூபா 8,244,168 நிலுவைத் தொகையொன்று ஆண்டின் இறுதியளவில் அறவிடப்பட வேண்டியிருந்ததுடன் அதில் கடந்த பலவருடங்களுக்குரிய நிலுவை ரூபா 6,885,171 ஆகும்.

(ஆ) 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக ஆதனவரி மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 2.3.3 வாடகை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய மொத்த வாடகை வருமானம் ரூபா 5,361,117 கூட்டுமொத்தமாக இருந்ததுடன், அதில் மிளாய்வாண்டில் ரூபா 3,577,992 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) கற்பிட்டி புதிய பஸ் நிலைய 10 ஆம் இலக்க கடையிலிருந்து ரூபா 231,210 தொகையும், 12 ஆம் இலக்க பழைய கடையிலிருந்து ரூபா 105,167 தொகையும் ஆன நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) குறிஞ்சம்பிட்டிய உப அலுவலக அதிகாரப் பிரதேசத்திலிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,444,267 தொகையான நிலுவை வாடகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 ஏனைய வருமானம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்குரிய ரூபா 803,388 தொகையான மொத்த ஏக்கர் வரியிலிருந்து ஆண்டின் போது ரூபா 50,772 தொகை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(ஆ) ஏக்கர் வரி அறவிடுவதற்குள்ள காணிகளை குறிப்பாக கண்டறிவதற்காக மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 நீதிமன்ற தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டின் இறுதியில் மாகாண சபை பிரதம செயலாளரிடமிருந்து முத்திரைக் கட்டணமாக ரூபா 10,432,532 என அறவிடவேண்டியிருந்தது.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

2016 ஆம் ஆண்டிற்கான செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குச் சொந்தமான காணி மற்றும் கட்டிடங்களின் 21 அலகுகள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இரண்டாவது அரை வருடத்துக்கான முத்திரைக் கட்டணம் கணிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,968,085 தொகையான உள்ளூராட்சி சேவை ஓய்வூதிய நிதியத்திற்கான பங்களிப்பைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 0002890535 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கின் மாதாந்த வங்கி இணக்கத்தை சமப்படுத்துவதற்காக கையிலுள்ள எஞ்சிய மீதியாக ரூபா 21,109 தொகையொன்றைக் காண்பித்து பிழையாக மாதாந்த வங்கி கணக்கிணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 29,838 தொகையுடன் செயற்பாடற்ற நிலையில் காணப்பட்ட 2897245 ஆம் இலக்க நடைமுறைக் கணக்கை செயற்படுத்துவதற்கோ அல்லது முடிவுறுத்துவதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 இனங்காணப்பட்ட நட்டம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) "கெனப்பி ஹட்" 01 மற்றும் 94 நூலகப்புத்தகங்கள் தொலைந்து போனமையின் காரணமாக நட்டம் ஏற்பட்டிருந்தது.

(ஆ) 115 கொடிக் கம்பங்கள் 08 அரசியல் அதிகாரிகளினால் எடுத்துச் செல்லப்பட்டதன் அடிப்படையில் ரூபா 147,344 நட்டமொன்று ஏற்பட்டிருந்தது.

**3.5 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

09 வாகனங்கள் மற்றும் ஒரு இலத்திரனியல் தராசு என்பன 01 இற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான காலவீச்சில் விளைவற்றுக் காணப்பட்டன.

**3.6 கழிவுப்பொருள் முகாமைத்துவம்**

கற்பிட்டி நகர எல்லையில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற 03 தொன் அளவிலான கழிவுப்பொருட்கள் அளவில் மீள் சுழற்சிக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், பிரதேசத்தில் நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற மேலும் 07 தொன் அளவிலான கழிவுப் பொருட்கள் அளவில் திறந்த காணியொன்றில் அகற்றப்பட்டமையின் காரணமாக சுற்றாடல் பிரச்சினைகள் ஏற்படுவதற்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டிருந்தது.

**3.7 மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையின் செயலாளர் பதவி பலவருட காலமாக வெற்றிடமாகக் காணப்பட்டது.

(ஆ) இரண்டாம் மற்றும் ஆரம்ப தரங்களில் முறையே 06 மற்றும் 03 வெற்றிடங்களும் மற்றும் அந்த தரங்களில் முறையே 05 மற்றும் 25 பேர்களின் மிகையும் காணப்பட்டன.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவை அமுல்படுத்தல்**

வடமேல் மாகாண பிரதம செயலாளின் 2010 ஒக்தோபர் 05 ஆந் திகதிய வ/பிர/லே/05/03 ஆம் இலக்க கணக்காய்வு குழு என்ற கடிதத்தின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு துறைகள் தொடர்பான குறைபாடுகள் அவ்வவ்போது எனது கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| | முறைமைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | நிலையான சொத்துப் பதிவேடொன்று நாளதுவரையாகப் பேணப்படாமை, காணி மற்றும் கட்டிடங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்படாமை. |
| (ஆ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானத்தை அறவிடல் தொடர்பாக பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை |

| | | |
|---|---|---|
| (இ) | கணக்கீடு | உபயோகப் பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாமை. |
| (ஈ) | கழிவுப்பொருள் முகாமைத்துவம் | அதிகாரப்பிரதேசத்தில் உருவாகின்ற சகல கழிவுப்பொருட்களையும் மீள் சுழற்சி செய்வதற்காக அனுப்பப்படாமை, கூட்டுப்பசளை உர உற்பத்தி நடவடிக்கைகளுக்காக தேவையான அளவினை விட ஊழியர்கள் அதிகமாக சேவையில் ஈடுபடுத்தியமை. |
| (உ) | மனித வள முகாமைத்துவம் | i. குறிஞ்சம்பிட்டி மற்றும் கடையாமோட்டை உப அலுவலகங்களில் பணிப்பொறுப்பு உத்தியோகத்தராக முறையே வருமானப் பரிசோதனை உத்தியோகத்தரும் சாரதியும் நியமிக்கப்பட்டிருந்தமை.<br>ii. வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | வாகனக் கட்டுப்பாடு | சபைக்குச் சொந்தமான சகல வாகனங்களினதும் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் அவற்றின் பொழிப்பு என்பன உரிய பிரகாரம் கணக்காய்விற்கு அனுப்பப்படாமை. செயற்படு நிலையில் காணப்படாத மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கமுடியாத சகல வாகனங்களும் விற்று தீர்க்கப்படாமை. |
| (எ) | முற்பணம் | முற்பணம் தீர்க்கப்படாமை மற்றும் தாமதம் காணப்பட்டமை |